(இ) 1971-ம் ஆண்டு திட்ட அறிக்கை மதிப்பீட்டின்படி எல்லாத் துறைகளிலும் ரூ. 938 கோடி ஆகலாம் என கணிக்கப்பட்டுள்ளது.

(உ) ஆரம்ப பணியாளர்களுக்கும் அவர்கள் சம்பந்தப்பட்ட இதர சில்லரை செலவினங்களுக்கும் 31-12-1973 வரை ரூ. 4.059 லட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

(எ) திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு இதுவரை மத்திய நிதி உதவி ஏதும் பெறப்படவில்லை.

Cholera

* 326 Q.—THIRU M. SANKARALINGAM : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) the total number of deaths, District-wise, in Tamil Nadu due to Cholera in 1973;

(*b*) whether it is a fact that the incidence of Cholera is to some extent high during this year; and

(*c*) if so, the reasons therefor?

காலரா நோய்

திரு. எம். சங்கரலிங்கம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1973-ஆம் ஆண்டில், தமிழகத்தில் காலரா நோயினால் இறந்தவர்கள், மாவட்ட வாரியாக, எத்தனை பேர்?

(இ) காலரா நோய் இவ்வாண்டு சிறிது மிகுந்திருக்கிறது என்பது உண்மையா?

(உ) ஆமெனில், அதற்குக் காரணம் யாது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ), (இ) & (உ) விவர அறிக்கை @ ஒன்று மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : தலைவரவர்களே, முனிசிபல் நகரங்களில் காலரா நோய் அதிகமாக இருக்கிறதா அல்லது கிராமப்பகுதிகளில் அதிகமாக இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : கேள்வி தெளிவாகக் காதில் விழவில்லை. மீண்டும் சொல்லும்படி கேட்டுக்கொள்கிறேன்.

@ 132 ஆம் பக்கத்தில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.

1974 ஏப்ரல் 23]

மாண்புமிகு மேலவைத் தலைவர் : கேள்வி தெளிவாக இல்லை என்கிறார், ஆகவே மறுபடியும் கூறவும்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : தலைவரவர்களே, இந்தக் காலரா நோய் பரவுவது நகரங்களில் அதிகமாக இருக்கிறதா அல்லது கிராமப் புறங்களில் அதிகமாக இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, மாதந்தோறும் எந்தெந்த இடங்களில் எவ்வளவு பேருக்கு ஏற்பட்டது, எவ்வளவு பேர் இறக்க நேரிட்டது என்ற விவரங்கள் தரப்பட்டிருக்கின்றன. சில பகுதிகளில் நகரப் புறங்களில் அதிகமாகப் பரவியிருக்கிறது, சில இடங்களில் கிராமப் புறங்களில் அதிகமாகப் பரவியிருக்கிறது.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, அமைச்சர் அவர்களால் தரப்பட்டுள்ள விவரங்களைப் பார்த்தால், இந்தக் காலரா நோய் வடஆற்காடு மாவட்டத்தில் அதிகமான பேர்களைப் பாதித்திருக்கிறது என்று தெரிகிறது. அந்த மாவட்டத்தில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி போதுமான அளவில் இல்லை என்ற காரணத்தால், அப்படி அதிகமாகப் பரவியிருக்கிறது என்பது உண்மையா ? அதை மனதில் கொண்டு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதியை அதிகப்படுத்த ஏதாகிலும் அறிவுரை வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, ஒரு குறிப்பிட்ட ஆண்டில்தான் வடஆற்காடு மாவட்டத்தில், 549 பேருக்கு இந்த நோய் ஏற்பட்டு 79 பேர் இறக்க நேரிட்டது என்ற செய்தி வருகிறதே தவிர மற்றொரு ஆண்டில் பார்க்கின்றபோது 147 பேருக்கு ஏற்பட்டு 25 பேர் இறந்தார்கள் என்று தெரிகிறது. ஆண்டுக்கு ஆண்டு, இடத்திற்கு இடம், நிலைக்கு நிலை மாற்றம் ஏற்படுகிறது. பொதுவாக குடிநீர் மூலம் இது ஏற்படக்கூடும்.

திரு. எம். சங்கரலிங்கம் : தலைவரவர்களே, 1973 ஆம் ஆண்டு 237 பேர் காலரா நோயால் பாதிக்கப்பட்டு இறந்திருக்கிறார்கள் என்று கூறப்பட்டிருக்கிறது. இந்த எண்ணிக்கையை மற்ற ஆண்டுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கின்ற போது, அதிகமில்லை, குறைவுதான் என்று கூறப்படுவதிலிருந்து, மற்ற ஆண்டுகளில் இதை விட அதிகமாக இருந்ததா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, 200, 237 என்று கொடுக்கப்பட்டிருப்பதெல்லாம், விகிதாசாரத்தின் அடிப்படையில் பார்க்கின்ற போது 3,500 பேர் பாதிக்கப்பட்டார்கள், 3,000 பேர் பாதிக்கப்பட்டார்கள் என்றால், 8 அல்லது 9 விழுக்காடுதான், பாதிக்கப்பட்டவர்களில் இறந்திட நேரிட்டது என்பது விளங்கும். மருத்துவ வசதி உடனடி கொடுக்கப்பட்ட

காரணத்தால், பெரும்பாலோர் இறந்துவிடாமல் பாதுகாக்கப்பட்டிருக்கிறார்கள். சில நேரங்களில் திடீரென்று இந்த நோய் பரவி விடுகிறது. அண்மைக் காலத்தில் இது ஒரு குறிப்பிட்ட அளவில் இருப்பதாகத் தெரிகிறது.

திரு. சி. வி. ராஜகோபால்: தலைவரவர்களே, இந்தக் காலரா நோய் ஏழைகள் வாழ்கின்ற குடிசைப் பகுதிகளில் அதிகமாகப் பரவி வருகிறதா அல்லது வசதி படைத்தவர்கள் வாழ்கின்ற பகுதிகளில் அதிகமாக இருக்கிறதா என்ற விவரம் தெரிவிக்க இயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, பொதுவாக குடிநீரில் ஏற்படுகின்ற கலப்புப் பொருள்களினால் இந்த நோய் ஏற்பட்டு வருகிறது. சில நேரங்களில் குடிநீர் வரும் இடத்தில் சாக்கடை நீர் கலந்துவிடுகிறது. கிணறுகளில் உள்ள தண்ணீரிலும் கெடுதல் ஏற்பட்டு, அதைப் பயன்படுத்துவதன் காரணமாக ஏற்படுகிறது. அதே மாதிரி திறந்து வைக்கப்பட்டு, அசுத்தப் பட்ட தின்பண்டங்களை வாங்கித் தின்பதாலும், இந்த நோய் பரவ வாய்ப்பு இருக்கிறது. இப்படிப்பட்ட இடங்களில் பெரும்பாலும் ஏழை மக்கள்தான் வாழ்ந்து வருகிறார்கள். அவர்கள்தான் அம்மாதிரியான தின்பண்டங்களையும் வாங்கி உண்கின்றார்கள். மேட்டுக்குடி மக்கள் வாழ்கின்ற பகுதிகளில் இது அதிகமாகப் பரவுவதற்கு வாய்ப்பில்லை.

Pilot Project of Assessment of Total Personality of Students

* 321 Q.—Thiru L. BALARAMAN (on behalf of Thiru S. VELLAPANDIAN): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether any examination of the results of the Pilot Project of assessment of total personality of students in educational institutions has been made; and

(*b*) if so, the details thereof?

மாணவர்களின் முழு அறிவு வளர்ச்சி மதிப்பீடு பற்றிய முன்னோடித் திட்டம்.

திரு. எல். பலராமன் (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கல்வி நிலையங்களில் உள்ள மாணவர்களின் 'முழு அறிவு வளர்ச்சி மதிப்பீடு' பற்றிய முன்னோடித் திட்டத்தின் முடிவுகள் குறித்து ஆய்வு ஏதேனும் மேற்கொள்ளப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?